# மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

# Provincial Department of Education Northern Province

## G.C.E.(A/L) Pilot Examination

| | | | | |
|---|---|---|---|---|
| **இந்து நாகரிகம் I** | **Two Hours** | **46** | **T** | **I** |
| **Hindu Civilization I** | **Gr -13 (2021)** | | | |

### பகுதி – I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) அத்வைத சிந்தனையின் தொடக்கத்தை காட்டும் வேத சூக்தம்,
1) நாஸ்தியசூக்கம்  2) புருஷசூத்தம்  3) யமசூத்தம்
4) கிருகசூத்தம்  5) வர்ணசூத்தம்

02) அவைதீகநெறிகளை கொண்டுள்ள தொகுதி
1) சமணம், சைவம், பௌத்தம்
2) பௌத்தம், சமணம், உலோகாயதம்
3) உலோகாயதம், காணாபத்தியம், பௌத்தம்
4) பௌத்தம், சௌரம், இஸ்லாம்
5) கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம்

03) வைணவ புராணங்கள மட்டும் கொண்ட தொகுதி
1) மச்சபுராணம், கருடபுராணம், கூர்மபுராணம், வராகபுராணம்
2) லிங்கபுராணம், விஷ்ணுபுராணம், கருடபுராணம், பதுமபுராணம்
3) நாரதீயபுராணம், கருடபுராணம், பாகவதபுராணம், மச்சபுராணம்
4) நாரதீயபுராணம், கருடபுராணம், விஷ்ணுபுராணம், பாகவதபுராணம்
5) பாகவதம், மச்சபுராணம், கூர்மபுராணம், வைணவபுராணம்

04) ஆழ்வார்களினால் பாடப்பெற்ற தலங்கள்
1) திருமுறைத்தலங்கள்  2) கிருஷ்ணமங்களம்  3) சதுர்வேதிமங்களம்
4) திவ்விய தேசங்கள்  5) திருவிடையாட்டம்

05) முதல் மூன்று வேதங்களும்
1) பிரஸ்தானதிரயம்  2) தத்துவத்திரயம்  3) திர்மூர்த்திக்கோட்பாடு
4) திரயீவித்யா  5) மூன்றுகாண்டம்

06) சங்க இலக்கியங்களில் வேந்தன் எனச் சிறப்பிக்கப்படுபவர்
1) இந்திரன்  2) வருணன்  3) சிவன்
4) முருகன்  5) கொற்றவை

07) கோவிற்கட்டக்கலையில் சிறந்து விளங்குபவன்
1) ஆச்சாரியார்  2) சிற்பி  3) பாகன்
4) ஸ்தபதி  5) ஒப்பந்தகாரர்

08) ஸ்நாகதன் எனப்படுபவன்
1) ஸ்மிருதியைக் கற்றவன்  2) குருதாள் பணிந்தவன்  3) ஸ்சுருதியைக் கற்றவன்
4) ஸ்நானஞ்செய்தவன்  5) குருதட்சணை வழங்கியவன்

09) இலங்கை மக்கள் கி.பி 1ம் நூற்றாண்டில் சிவவழிபாட்டை மேற்கொண்டவர்கள் எனக் கூறியவர்கள்
1) பாகியன் 2) தொலமி 3) எலியட்
4) யுவாங்சுவாங் 5) மாவேசேது

10) இராஜாராம் மோகன்ராய் சாதிவழக்கொழிப்பை சட்டரீதியாக்கிய ஆண்டு
1) 1823 2) 1815 3) 1804
4) 1820 5) 1829

11) தாளசமுத்திரம் என்னும் இசைநூற்காலம்
1) சங்ககாலம் 2) சங்கமருவியகாலம் 3) பல்லவர்காலம்
4) சோழர்காலம் 5) நாயக்கர்காலம்

12) ஐந்தொழில்களில் திதி என்பது
1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல்
4) அருளல் 5) மறைத்தல்

13) "முந்தைவினைமுழுவதும் ஓய உரைப்பன்......" என்பதில் முந்தைவினை என்பது
1) ஆணவம் 2) கன்மம் 3) பிராரத்துவம்
4) ஆகாமியம் 5) சஞ்சிதம்

14) தெய்வங்களில் அவதாரம் பற்றிக் குறிப்பிடும் புராண இலக்கணம்
1) ஆபாச்சயா 2) ரக்ஷா 3) மன்வந்தரம்
4) கேது 5) முத்தி

15) விஜயநகர நாயக்கர் காலத்தில் நால்வேதங்களுக்கு உரை எழுதியவர்
1) புக்கன் 2) கரிகரர் 3) சாயனர்
4) கிருஸ்ணதேவராயர் 5) ஸ்வரததீட்சிதர்

16) "தேசபக்தமெய்ஞ்ஞானி" எனப் போற்றப்படுபவர்
1) விவேகானந்தர் 2) இராமானந்தர் 3) இராமகிருஷ்ணர்
4) தயானந்த சரஸ்வதி 5) இராஜாராம்மோகன்ராய்

17) "பெரிய கவி" எனப்போற்றப்படும் மன்னன்
1) மகேந்திர வர்மன் 2) இராசசிம்மன் 3) கிருஸ்ணதேவராயர்
4) சமுத்திர குப்தன் 5) இரஜேந்திர சோழன்

18) சைவத்தில் சன்மார்க்கம் போல் வைணவத்தில்
1) தாசியம் 2) திருமண்காப்பிடல் 3) வாத்சல்யம்
4) சகியம் 5) மதுரம்

19) பண்குல எனும் பிராமணன் கல்வி போதித்த மன்னன்
1) எல்லாளன் 2) கஜபாகு 3) பண்டுகாபயன்
4) விஜயன் 5) துட்டகைமுனு

20) “கிறிஸ்தவ கண்டன குடாரி” எனப் போற்றப்படுபவர்
1) காசிவாசி செந்தில்நாதையர் 2) அருணாசலதேசிகர் 3) விபுலானந்தர்
4) ஆறுமுகநாவலர் 5) விவேகானந்தர்

21) “பெரியகற்றளி” எனப்படுவது
1) தஞ்சைப்பெரியகோயில் 2) காஞ்சி கைலாசநாதர் கோயில் 3) மண்டகப்பட்டு
4) மாமல்லபுரம் 5) தர்மராஜபுரம்

22) சீவன் முத்தி எனப்படுவது
1) தாசமார்க்க முத்தி
2) பக்குவப்பட்டமுத்தி
3) கிரியைநெறியை கடைப்பிடித்தாலடையும் முத்தி
4) இறந்தபின் பெறும் முத்தி
5) உயிரோடு வழும்போது அடையும் முத்தி

23) நித்தியாக்கினி வளர்க்கப்படும் ஈழத்துச் சிவாலயம்
1) நகுலேஸ்வரம்
2) திருக்கேதீஸ்வரம்
3) முன்னேஸ்வரம்
4) ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரம்
5) பொன்னம்பலவாணேஸ்வரம்

24) தமிழாகமமாகச் சிறப்பிக்கப்படுவது
1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருமந்திரம்
4) பெரியபுராணம் 5) திருவிசைப்பா

25) சோழர்காலத்தில் பண்ணோடு திருமுறையோத நியமிக்கப்பட்டோர்
1) தேவாரநாயகம் 2) பாணர் 3) ஓதுவார்கள்
4) பண்ணிசையாளர் 5) பிடாரர்கள்

26) நீள்வட்டப்பாதை பற்றி கூறும் வானியற்கோட்பாடு
1) வாராஹிமிகர்க்கோட்பாடு 2) சூரியக்கோட்பாடு 3) பிதாமகக்கோட்பாடு
4) புளிஷக்கோட்பாடு 5) கணேஷ் தைவஞ்ஞர் கோட்பாடு

27) பிரமசூத்திரத்தின் ஆசிரியர்
1) கௌடில்யர் 2) பாதாராயணர் 3) வான்மீகி
4) பராசரர் 5) நாரதர்

28) ஹிந்தி மொழியில் “இராம சரிதமானஸ்” என்னும் இராமாயணத்தை எழுதியவர்
1) இராமதாசர் 2) கண்கதாசன் 3) காளிதாசர்
4) பசவர் 5) துளசிதாசர்

29) அவிமுக்தேசுவர் எனும் சிவனின் சயனவடிவத் தொழில்
1) சிருஷ்டி 2) திதி 3) சங்காரம்
4) அனுக்கிரகம் 5) திரோபவம்

30) “பசியுள்ளவனுக்கு சமயபோதனை ஆகாது” எனக்கூறியவர்
1) ஆறுமுகநாவலர் 2) விபுலானந்தர் 3) விவேகானந்தர்
4) இராஜாராம்மோகன்ராய் 5) தயானந்த சரஸ்வதி

31) நிலையாக ஓர் இடத்தில் நிறுவப்படும் விக்கிரகங்கள்
1) சலாசலம்
2) அசலம்
3) சலம்
4) பாலசிலை
5) யுவசிலை

32) பத்துமலை முருகன் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழா
1) இராமாயணம் ஓதுதல்
2) கார்த்திகைத்தீபம்
3) தைப்பொங்கல்
4) வருடப்பிறப்பு
5) தைப்பூசம்

33) பயன்கருதா கடமைவழி நின்ற நாயனார்
1) திருநாவுக்கரசர்
2) திருஞானசம்பந்தர்
3) சுந்தரர்
4) மாணிக்கவாசகர்
5) திருமூலர்

34) “திரிமலத்தார்” எனப்படுவோர்
1) ஆணவமலத்தை மட்டும் உடையவர்
2) கன்ம மலத்தை மட்டும் உடையவர்
3) மாயை மலத்தை மட்டும் உடையவர்
4) ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களை உடையவர்
5) ஆணவமலம் அற்றவர்கள்

35) இராமானுஜர் பிரபஞ்சத்தைக் குறிக்கப் பயன்படுத்திய பெயர்
1) சடம்
2) அசித்
3) மாயை
4) உலகு
5) சதசத்விலக்கணம்

36) அதர்வவேத பேஷணி, ஆயுஷ்யாணி சூத்தங்கள் குறிப்பிடும் சிந்தனை
1) மருத்துவம்
2) சோதிடம்
3) வானவியல்
4) ஒழுக்கம்
5) அறம்

37) “ஐம்பெரும் வேள்வி” ஆற்றவேண்டிய ஆச்சிரமத்தவர்
1) பிரமச்சரியர்
2) கிருகஸ்தர்
3) பிராமணர்
4) வனப்பிரஸ்தர்
5) சந்நியாசிகள்

38) “பாதாங்கும் கோயிலும் பொன்மண்டபமும்…..” எனும் பாடலில் போற்றப்படும் மன்னன்
1) குளக்கோட்டன்
2) தாழிக்குமரன்
3) இராஜராஜன்
4) இராஜேந்திரசோழன்
5) மாணாபரன்

39) “திரிதாது” என்பதனை வரையறுக்கும் இருக்குவேத சூக்தம்
1) வர்ணசூத்தம்
2) யமசூத்தம்
3) பிரம்மச்சாரியசூத்தம்
4) ஔஷ்திரி சூக்தம்
5) கிருஷசூத்தம்

40) “அங்கோவாட்” சிவாலயத்தைக் கட்டிவித்த மனன்னன்
1) 1ம் ஜயவர்மன்
2) இந்திரவர்மன்
3) சூரியவர்மன்
4) 7ம் ஜயவர்மன்
5) யசோவர்மன்

- ***41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றைப் பின்வரும் அட்டவணையில் I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.***

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>பௌத்த தூபி முன்மாதிரி | F<br>பிரபோதசைதன்யர் | K<br>வன்னி | P<br>இதிகாசம் படித்தல் |
| B<br>மாதோட்டம் | G<br>தேவராஜவழிபாடு | L<br>சிகரம் கொண்டவை | Q<br>மதங்கசூளாமணி |
| C<br>விகற்பம் | H<br>நாகரம் | M<br>நகை | R<br>மதம் |
| D<br>வைத்திலிங்கதேசிகர் | I<br>மகாதேவன்கோயில் | N<br>வியாபாரம் | S<br>பாலாவி |
| E<br>இராஜகுரு | J<br>கற்பம் | O<br>சுவாமி சிவானந்தர் | T<br>தியோகா தசாவதாரகோயில் |

41) இந்துக் கட்டிடக்கலையோடு தொடர்புடைய தொகுதி
1) AHMP 2) AHLT 3) BHLT 4) EIKS 5) BGLT

42) இந்துப்பண்பாட்டுப் பரம்பலோடு தொடர்புடைய தொகுதி
1) EGNP 2) EINP 3) DHNT 4) CHMR 5) AGNP

43) ஆணவமலத்துடன் தொடர்புடைய தொகுதி
1) EJMR 2) AJMR 3) CJMR 4) BGMT 5) DJMQ

44) ஈழத்து சமயப்பெரியவரோடு தொடர்புடையது
1) EILR 2) AGLR 3) CHMQ 4) DFOQ 5) DFNQ

45) பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றுடன் தொடர்புடையது
1) BJOP 2) EIKS 3) BGOP 4) EHNP 5) BIKS

- ***46 தொடக்கம் 50 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.***

46) ஆச்சிரம தர்மங்கள் தனிமனித அறம் ஒழுக்கம் ஆகியவற்றினூடே ஆன்மீக இலட்சியத்தை அடைய உதவுகின்றன.
1) ஆச்சிரம தர்மங்கள் வாழ்க்கைப் படிநிலைகள் எனவும் அழைக்கப்படும்
2) பிரமச்சாரியம் இல்லறம், வனப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்காகும்.
3) மெய்ப்பொருளை நோக்கி மாணவனை அழைத்துச் செல்லும் கல்வி பிரம்மச்சாரியம் எனப்படும்
4) ஐம்பெரும் வேள்வி இரண்டாம் படிநிலையில் முதன்மை பெறும்
5) வாழ்க்கையில் தன்கடமைகளை முடித்து துறவிற்கு ஆயத்தமாகும் நிலையே வனப்பிரஸ்த நிலையாகும்

47) வேதபுராண கருத்துக்களை மக்கள் மயப்படுத்த கதாப்பிரசங்கங்கள் உதவுகின்றன.
1) கதாப்பிரசங்க மரபில் சிறந்தவராக சங்கர சுப்பையர் காணப்படுகின்றார்.
2) சச்சிதானந்த யோகிகள் தமிழ்நாடுவரை புகழ்பெற்றவர்
3) இசையோடு கதைசொல்லும் மரபு கதாப்பிரசங்கமாகும்
4) கல்முனை சிவ அன்பு கிழக்குமாகாணத்தில் இப்பணியினைப் புரிந்துள்ளார்.
5) அளவெட்டி சி.வினாசித்தம்பி இப்பணியில் ஈடுபட்டவர் அல்ல.

48) சுவாமி தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பட்ட சீர்திருத்த இயக்கம் ஆரியசமாசமாகும்.

1) வேதத்தை நோக்கித் திரும்புவதே இவரின் பிரதான கோட்பாடாகும்.
2) ஆரியசமாசம் 1928இல் ஆரம்பிக்கப்பட்டதாகும்.
3) மதம் மாறியவர்களை இந்துசமயியாக்க சுத்தி சடங்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
4) வேதத்தை ஆதாரம் காட்டி பெண்ணுரிமையை நிறுவினார்.
5) இந்துக்களை ஒன்றுதிரட்ட சங்கடனம் எனும் அமைப்பை அறிமுகப்படுத்தினார்.

49) கைலாசநாதக்குருக்கள் சமஸ்கிருதம் இந்துநாகரிகம் ஆகிய துறைகள் வளர பணிபுரிந்த பெரியார்.

1) லண்டன் இன்டர்மீடியட் பரீட்சையில் சித்தியடைந்த மொழிகளாக தமிழ், ஆங்கிலம். சமஸ்கிருதம், இலத்தீன் ஆகிய காணப்படுகின்றன.
2) யாழ் பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிகத்துறையின் முதற்பேராசிரியர் ஆவார்.
3) உயர்கல்வி அமைச்சில் இந்துசமய பாட ஆலோசகராகப் பணிபுரிந்துள்ளார்.
4) இந்துநாகரிக சமஸ்கிருத உயர்கற்றல் ஆய்வுக்கு வித்திட்டவர்
5) வடமொழி இலக்கிய வரலாறு இவரால் எழுதப்பட்ட நூல்களில் உள்ளடங்கவில்லை

50) இலங்கையில் இந்துக்கல்வி பரம்பரியம் சோழர் ஆட்சி வரும்வரை அரண்மனை சார்ந்து வைதீக கல்வியாகவே காணப்பட்டது.

1) பண்டுலா பிராமணன் பண்டுகாபய மன்னனுக்கு அநுராதபுர காலத்தில் கல்வி போதித்தான்
2) அரண்மனைகளில் பிராமணச்செல்வாக்கே மேலோக்கிக் காணப்பட்டது
3) சைவவித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலைகளை நிறுவிப் பணிபுரிந்துள்ளது.
4) அரண்மனைகளில் அர்த்தசஸ்திரம், மனுசாஸ்திரம் முதலியன முதன்மை நூல்களாகக் காணப்பட்டன.
5) மன்னர்களின் வில்வித்தை போன்றனவும் அரண்மனைகளிலே கற்பிக்கப்பட்டன.

**(50x2=100 புள்ளிகள்)**

# மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

# Provincial Department of Education Northern Province

## G.C.E.(A/L) Pilot Examination

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரீகம் II<br>Hindu Civilization II | Three Hours<br>Gr -13 (2021) | 46 | T | II |

(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. இந்துமத வரலாற்றில் ஆகமம் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்.

ஆ) கோயிற் கிரியை

இ) தத்துவம்

ஈ) நுண்கலைகள்

(5+5+5+5=20புள்ளிகள்)

02. தமிழகத்தில் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சைவபக்தி இயக்கத்தின் பிரதான அம்சங்களை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.

அ) அரசர்களின் பங்கும் பணியும்

ஆ) நாயன்மார்களின் பணிகள்

இ) திருக்கோயில் வழிபாடு

ஈ) சைவ, வைணவ பக்தி இலக்கியங்கள்

(5+5+5+5=20புள்ளிகள்)

03. இலங்கையின் இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கு மேல்வரும் சமய நிறுவனங்கள் ஆற்றிய பணிகள் பற்றிப் பரிசீலிக்குக.

அ) சைவ பரிபாலனசபை

ஆ) சைவவித்தியா விருத்திச்சங்கம்

இ) அகில இலங்கை இந்துமாமன்றம்

ஈ) இராமகிருஷ்ணமிஷன்

(5+5+5+5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. சைவசித்தாந்தம் ஆன்மக் கோட்பாடு பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களை விளக்குக.

(20 புள்ளிகள்)

05. வேதாந்த தத்துவ வளர்ச்சியில் இராமானுஜரின் விசிட்டாத்துவைதக் கோட்பாடுகளை ஆராய்க.

(20 புள்ளிகள்)

06. "மனிதன் ஆன்மீக வாழ்வில் உய்வு பெறுவதற்கு தர்மமே அடிப்படையாக விளங்கி வந்துள்ளது" இக்கூற்றினை ஆராய்க.

(20புள்ளிகள்)

07. இந்துநாகரிக வரலாற்றில் இந்து மருத்துவம் பெறும் சிறப்புக்களை மேல்வரும் விடயங்களில் விளக்குக.

அ) இந்து வழிபாட்டு முறைகளில் மருத்துவ சிந்தனைகள்.

ஆ) இந்து மருத்துவத்தின் முக்கியத்துவம்

(10 + 10புள்ளிகள்)

08. இலங்கையில் பொலன்னறுவைக் காலத்தில் ஏற்பட்ட இந்துசமய வளர்ச்சியின் பிரதான அம்சங்களைப் பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)